FIRST INFORMATION REPORT TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

Under Section 173 BNSS" முதல் தகவல் அறிக்கை C 8167202

1. District : Ranipet PS: Vigilance & Anti Corruption Ranipet Year: 2026 FIR No.: 02/2026 Date: 20.05.2026
   மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முத.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: The prevention of Corruption Act 1988 as amended in pc (Amendment) Act, 2018 Sections பிரிவுகள்: U/s 7(b) of PC (Amendment) Act 2018
   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 15.05.2026 Date to : 16.05.2026, 18.05.2026 and 19.05.2026
   குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
   Time Period : Time from : Time to :
   நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
   (b) Information Received at PS. Date : 20.05.2026 Time : 08.30 hrs
   காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
   (c) General Diary Reference : Entry No(s) Volume-I 2026 Time : 20.05.2026 08.30 hrs & 09.30 hrs
   பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக - Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: - O/o the VAO, Vadamambakkam, North East 60 kms
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
   Beat Number : — (b) Address : O/o the VAO, Vadamambakkam Village Arakkonam Tk, Ranipet District
   முறைக் காவல் எண் முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : Tr. P. Vinoth (b) Father's/ Husband's Name : Prakasam
   குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : 46/2026 (d) Nationality : Indian (e) Passport No. :
   நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : - Place of Issue : —
   வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : — (g) Address : No.15, Sai Srinivasa Nagar, Vadamambakkam village, Arakkonam Taluk, Ranipet District
   தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
   (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1. Tr. Thanikachalam, Village Administrative Officer, Vadamambakkam village, Arakkonam Taluk, Ranipet District

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)


—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் கருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet enclosed



13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at Item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

20/05/26

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

S. Vijayalakshmi 20/5/26

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

20.05.2026 @ 12.00 hrs

Name: பெயர் S. Vijayalakshmi
Rank: நிலை .....No. எண் .....
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Ranipet.

<u>பணிந்து அனுப்பப்படுகிறது:</u> இராணிப்பேட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் S.விஜயலட்சுமி ஆகிய நான் 20.06.2026 ஆம் தேதி காலை 08.30 மணிக்கு அலுவலகத்தில் ஆஜரில் இருந்தபோது, திரு.P.வினோத் (வயது 46/2026), த/பெ பிரகாசம், எண்.15, சாய் சீனிவாச நகர், வடமாம்பாக்கம் கிராமம், அரக்கோணம் தாலுக்கா, இராணிப்பேட்டை மாவட்டம் என்பவர் ஆஜராகி கொடுத்த புகார் மனுவின் விவரம் பின்வருமாறு: இராணிப்பேட்டை 20.05.2026 அனுப்புநர் P.வினோத் (வயது 46/2026) த/பெ பிரகாசம், எண்.15, சாய் சீனிவாச நகர், வடமாம்பாக்கம் கிராமம், அரக்கோணம் தாலுக்கா, இராணிப்பேட்டை மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, இராணிப்பேட்டை, இராணிப்பேட்டை மாவட்டம். அய்யா, நான் இராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் தாலுக்கா, வடமாம்பாக்கம் சாய் சீனிவாச நகரில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் தனியார் கம்பெனியில் வேலை செய்து வந்தேன், தற்போது எந்த வேலையும் செய்யவில்லை. என்னுடைய மனைவி பெயர் வனிதா, அவர் அரக்கோணத்தில் தனியார் பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்து வருகிறார். நான் என்னுடைய பெயரில் அரக்கோணம் தாலுக்கா வடமாம்பாக்கம் கிராமம் சர்வே எண்.413/1N, ஐஸ்வர்யம் நகர் மனை எண்.27, 1046 சதுர அடி காலி மனையினை கன்னியாகுமரி மாவட்டம் விளவங்கோடு உண்ணாமலை கடை, கீழத்தெருவை சேர்ந்த K.V.சுதா க/பெ செந்தில்குமார் என்பவரின் பொது அதிகார முகவரான சென்னை கொளத்தூரை சேர்ந்த ருணானா த/பெ விவேகி என்பவரிடமிருந்து ரூ.1,04,600/- வாங்கினேன். அதனை கடந்த 03.03.2026 அன்று அரக்கோணம் சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.2369/2026-ன் படி என்னுடைய பெயரில் பத்திர பதிவு செய்யப்பட்டது. நான் மேற்படி சொத்தினை வாங்கும் முன்பே சொத்தின் உரிமையாளரான சுதா என்பரின் பெயரில் பட்டா மாறுதல் செய்ய வேண்டி சிலமுறை வடமாம்பாக்கம் திரு.தணிகாசலம் கிராம நிர்வாக அலுவலரை சந்தித்துள்ளேன். ஆனால் அவருடைய பெயரில் பட்டா பெயர் மாறுதல் ஆகவில்லை. அதன்பிறகு மேற்படி சொத்திற்கு என்னுடைய பெயரில் பட்டா பெயர் மாறுதல் செய்ய வேண்டி 14.05.2026 அன்று இ-சேவை மையத்தில் விண்ணப்பித்தேன். அதனுடைய ஒப்புகை சீட்டின் பட்டா மாறுதல் மனு எண்.2026/0103/37/009969 ஆகும். பின்னர் 15.05.2026 அன்று காலை சுமார் 11.30 மணிக்கு வடமாம்பாக்கம் VAO தணிகாசலம் அவர்கள், அவருடைய செல்போன் எண்.9976183302-லிருந்து என்னுடைய செல்போன் எண்.9840853727-க்கு போன் செய்து பட்டாவிற்கான நீங்கள் விண்ணப்பித்த மனு என்னுடைய லாகின் வந்துள்ளது பத்திர நகல் எடுத்து கொண்டு என்னுடைய அலுவலகத்தில் கொடுங்கள் என்று கூறினார். அதன்படி நான் 15.05.2026 அன்று மதியம் சுமார் 2.00 மணிக்கு வடமாம்பாக்கம் கிராம நிர்வாக அலுவலர் தணிகாசலம் என்பவரை வடமாம்பாக்கம் VAO

அலுவலகத்தில் சந்தித்து, சொத்து ஆவணத்தையும் பட்டா மாறுதல் ஒப்புகை சீட்டினையும் கொடுத்து விட்டு என்னுடைய பட்டா பெயர் மாறுதல் விண்ணப்பத்தின் நிலை குறித்து விசாரித்தேன். அவர் அந்த ஆவணங்களை சிறிது நேரம் பார்த்து விட்டு என்னிடம் பட்டா பெயர் மாற்றம் செய்ய ரூ.20,000/- செலவு ஆகும் என்று சொன்னார். அதற்கு நான், எதற்கு அவ்வளவு பணம் கொடுக்க வேண்டும் என்று கேட்டதற்கு உங்களுடைய சொத்து ஆவணங்கள் லிங்க் இல்லை என்றும் அதனால் டெபுடி தாசில்தார் அவ்வளவு பணம் கேட்பார் என்றும் அந்த பணத்தை கொடுத்தால் தான் அவர் பட்டா பெயர் மாற்றம் செய்து தருவார் என்றும் சொன்னார். என்னால் அவ்வளவு பணம் கொடுக்க முடியாது என்று சொன்னதும் அவர் சரி ரூ.15,000/- கொடு இதற்கு மேல் குறைக்க முடியாது, லிங்க் இல்லாத டாக்குமெண்ட் வைத்து பட்டா பெயர் செய்ய இவ்வளவு பணம் கொடுத்தால் தான் முடியும் என்று கராராக சொல்லி என்னை அனுப்பி வைத்து விட்டார். பின்னர் கடந்த 16.05.2026 அன்று என்னுடைய மனு மண்டல துணை வட்டாட்சியர் அவர்களின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டதாக என்னுடைய கைபேசிக்கு மெசேஜ் வந்தது. அன்றைய தினம் மதியம் சுமார் 2.00 மணிக்கும், மாலை 4.45 மணிக்கும் VAO தணிகாசலம் அவர்கள் எனக்கு போன் செய்து உங்களுடைய மனுவினை நான் DTக்கு அனுப்பி வைத்து விட்டேன். நான் கேட்ட பணம் ரூ.15,000/- ஏன் இன்னும் கொண்டு வரவில்லை என்று கேட்டார். அதேபோல் 18.05.2026 ஆம் தேதி மாலை சுமார் 5.00 மணிக்கு VAO எனக்கு போன் செய்து நான் கேட்ட பணம் ரூ.15,000/- ஏன் இன்னும் கொண்டு வரவில்லை என்று கேட்டார். அந்த பணத்தை கொடுத்தால் தான் DT அந்த விண்ணப்பத்தை பார்த்து பட்டா பெயர் மாற்றம் செய்வார் இல்லையென்றால் திருப்பி அனுப்பி விடுவார் என்று சொன்னார், அதற்கு நான் போய் DT-யை நேராக பார்த்து ரூ.15,000/- குறைக்க சொல்லி கேட்கவா என்று VAO-யிடம் சொன்னதற்கு அவர் உங்களுக்கு இன்னும் என்னதான் செய்றது ஏற்கனவே ரூ.5,000/- குறைத்து விட்டேன். DT பணம் வாங்காமல் பட்டா பெயர் மாற்றம் செய்யமாட்டார் உங்களிடம் நேரடியாக பணம் கேட்க மாட்டார் பணம் கொடுத்தால் வாங்கவும் மாட்டார், பணம் கொடுத்தால் சீனியாரிட்டி வைக்க முடியும் பணம் கொடுக்கவில்லை என்றால் சீனியாரிட்டி போய்விடும், DT-ஐ போய் பார்க்க வேண்டாம் என்று சொல்லிவிட்டு பணத்தை எடுத்து கொண்டு வந்து தன்னிடம் தருமாறு திட்டவட்டமாக தெரிவித்துவிட்டார். மீண்டும் 19.05.2026 அன்று மதியம் சுமார் 3.15 மணிக்கும், இரவு 7.30 மணிக்கும் போன் செய்து பணம் எடுத்து கொண்டு வரவில்லையா என கேட்டார். நான் சொந்த வேலையாக வெளியில் இருக்கிறேன் என்றும் நாளை வருகிறேன் என்று சொல்லிவிட்டேன். VAO தணிகாசலம் அவர்கள் தொடர்ச்சியாக எனக்கு போன் செய்து அவர் என்னுடைய விண்ணப்பத்தை Forward செய்த பிறகும் லஞ்சமாக பணம் ரூ.15,000/- ஐ என்னிடம் கேட்கிறார். லஞ்சமாக பணம் ரூ.15,000/-ஐ கொடுத்து பட்டா பெயர் மாற்றம் செய்ய

எனக்கு விருப்பமில்லை. எனவே என்னிடம் லஞ்சமாக ரூ.15,000/-பணம் கேட்கும் வடமாம்பாக்கம் கிராம நிரவாக அலுவலர் திரு.தணிகாசலம் என்பவர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். SD/-XXXXXX (P.Vinoth) 20/05/26.

Sir,

Received the complaint on 20.05.2026 at 08.30 hrs. and after verifying the antecedents of the accused and credibility of the complainant, I have registered a case in Ranipet V&AC Cr.No.2/2026 u/s 7(b) of PC Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 on 20.05.2026 at 09.30 hrs. Sd/-xxxxx (S.Vijayalakshmi) 20/5/26 Inspector of Police, Vigilance & Anti-Corruption, Ranipet.

The FIR in original along with the complaint is sent to the Hon'ble Principal District & Sessions Judge / Special Judge, Ranipet and other copies to the Officers concerned.

S.Vijayalakshmi
20/5/26

Inspector of Police
Vigilance & Anti-Corruption
Ranipet.